செய்பவர் நம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தருமராக, பீமராக, அர்ச்சுனராக, நகுலனாக, சகாதேவனாக, ஐந்து பாண்டவர்களின் வடிவமாக, அதர்மத்தின் சாட்சியாக இருக்கின்ற, நிழலாக இருக்கின்ற துரியோதனன், துச்சாதனன் உள்ளிட்டோர்களை வீழ்த்தி தருமத்தை நிலைக்கச் செய்தவர்; (மேசையைத் தட்டும் ஒலி) கௌரவர்களை அழித்து, தருமத்தை நிலைநாட்டியவர் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தான ஐந்து அறிவிப்புகளை இன்று வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.